**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: STC. 637/2018**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆறுமுகம் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**26.03.2024**

**முதல் விசாரணை**

நான் மேலக்கோட்டை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக பணி செய்து வருகிறேன். நான் 2016 வது வருடம் குமார் என்பவரிடம் ரூ.20000/- கடன் வாங்கி இருந்தேன். அதுக்கு ஆதாரமாக என்னுடைய வங்கி கணக்கு செக்கை பூர்த்தி செய்யாமல் கையெழுத்து மட்டும் போட்டுக் கொடுத்திருந்தேன். ஒரு தவணை ரூ.15000/- பணம் கொடுத்திருந்தேன். மீதி தவணையாக ரூ. 5000 ஐ கொடுத்து செக்கை திரும்ப பெற்றுக் கொள்வதாக சொல்லியிருந்தேன். அவர் இடைப்பட்ட காலத்தில் இறந்துவிட்டார். என்னுடைய வீட்டிற்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது. நான் அதிர்ச்சியாகிவிட்டேன். மனுதாரர் சமுத்திரம் என்பவர் என் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் வைத்திருக்கும் வாகனம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் எப்சி காட்டுவேன். ஆனால் இந்த வழக்கில் மே மாதம் எப்சி காட்டுவதற்கு வேண்டி பணம் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார். அப்படியே எப்சி காட்டுவதற்கு பணம் வாங்கியிருந்தாலும் ரூ.5000/- ல் காண்பித்துவிடலாம். ஆனால் பொய்யாக ரூ.1 லட்சம் வாங்கியுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இதனால் மிகவும் மனஉளைச்சல் அடைந்துள்ளேன். எனக்கும் எதிரிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. எதிரியிடம் நான் எந்தவித தொகையும் பெறவில்லை. அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி.**

நான் திருமங்கலம் டாக்சி ஓட்டுனர் சங்கத்தில் ஒரு ஓட்டுனர் என்றால் சரிதான். நான் 25 வருடமாக ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். நான் உறுப்பினராக உள்ள சங்கம் திருமங்கலம் விருதுநகர் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். இந்த 25 வருட காலத்தில் எதிரியை எப்போதாவது எங்கள் சங்கத்தில் பார்த்துள்ளீர்களா

என்றால் பார்த்திருக்கிறேன். நான் பணம் வாங்கியதாக சொன்ன குமார் என்பவரின் அப்பா பெயரோ முகவரியோ தெரியுமா என்றால் தெரியாது. அந்த குமார் எப்போது இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த குமாருக்கும் இந்த மனுதாரருக்கும் என்ன உறவு முறை என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னுடை ய பதில் அறிவிப்புக்கு வழக்கறிஞருக்கு நான் தான் விளக்கம் சொன்னேன். அதில் பணம் வரவைத்து அதை கை அட்டையில் குறித்து வைத்துள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் குமார் எந்த நோட்டும் தரவில்லை. இந்த புகார்தாரர் தான் ரூ.30000/- தரவேண்டும் என நோட்டை காண்பித்துக் கொடுத்தார். டிஎன் 60 டபிள்யூ 6680 என்ற நான்கு சக்கர வாகனம் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி வண்டி எந்த காலகட்டத்தில் எப்சிக்கு சென்றது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தற்போது என்னிடம் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.1 ல் காண்பிக்கப்படும் கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். குமார் இறந்த பிறகு அவரிடம் கொடுத்திருந்த எனது காசோலையை திரும்ப பெற்று தருமாறு இன்றுவரை காவல் நிலையத்தில் அவர்களது குடும்பத்தார்கள் மீது புகார் எதுவும் தரவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு வாகனம் எப்சிக்கு செல்லவேண்டும் என்றால் குறைந்தது 3 மாதங்கள் வேலை செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வண்டியில் ஏற்படும் வேலைகளை பொறுத்து 3 மாத காலம் ஆகும் என்றால் சரியல்ல. இந்த காசோலையானது இந்த வாதியிடம் பணம் பெற்றுக் கொண்டு கொடுத்தது என்றும் குமாரிடம் பணம் வாங்கியதாகவும் காசோலை கொடுத்ததாகவும் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.